உ

முருகன் துணை.

# சடாக்ஷரமாறல்.

இஃது
சத்தியபாஷ பிரசங்கர்
செங்கல்வராயபத்தரிடங்கிடைத்த
சுத்த வேட்டுப்பிரதிப்படி,

## வா-காளமேகேஸர்

அனுபவசித்தமாயிருந்த யந்திரங்களைச்
சேர்த்து,

28, VITHIYANATHA MUDALY ST, MADRAS

சென்னை
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1915.

இதன் விலை பை-6.

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

# சடாக்ஷரமாறல்.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

ஆரணத்தி னுட்பொருளா மாறெழுத் தின் மாறலையித், தாரணியோர் கற்றுத் தழைத்தோங்கச் - சீரிலகு, அத்தி முக னடியை யன்பான் மனமுருகி, நித்தந் துதிப்பா நினைந்து.

## சுப்பிரமணியர் காப்பு.

வெண்பா.

ஓரா றெழுத்தி னுயர்மாற லோத வீராறு தோள னிணையடியைச்-சீராகக் கையாற்றொழுதுருகிக் கானத்தினும்பா மெய்யால் வணங்கிடுவமே. [டி


உ
முருகன் துணை.

## வசியம்.

சரஹணபவவெனச்சங்கரியீன்ற
சண்முகரீங் ஓங்கார
சமையகாருணியப் புதல்வனேமுருகா
தந்தியுஞ்சுழி திரிகோணச்
சரஹணபவவென சனங்களுந்துதிக்க
சரியைகிரியா யோகஞானச் [ல்
சதங்கைகள் காலில்கொஞ்சியேமயில்மே
தாண்டியேசத்திவேலெடுத்து
சரஹணபவவெனசமையமேவந்துயிச்
சவ்ரவ்ஹவ்வெனணவ்வுஞ்
சகலபவ்வவ்வுங்கிலியெனஐயுஞ்
சாத்தவேபிவ்லிகளனைத்தும்
சரஹணபவவென தலைதனைவிரித்துத்
தரித்திடக்கலைதெரியாமல்
சங்றங்அங்கெனசடுதியில்வருவாய்
சண்முகசரஹணபவனே. (க)

உ

ஆறுமுகன் துணை.




## மூலமந்திரம்.

ஓம்-றீம்ஐயும்-கிலியும்-ஔவும் சௌவும்

சரஹணபவ.


இந்தச்சக்கரத்தைவில்வப்பலகையில் வரைந்து, எழுத்துகளையடைத்து, கலை ஆசனத்தில் கிழக்கு முகமாக விருந்து பூசித்து,உருத்திராட்சத்தாழ்வடத்தால் ஆதிவாரந் தொடங்கி - ௧௦௦௮-உருவேற்றச் சித்தியாகும்,

## ஆக்ருஷணம்.

ரஹணபவசவென்னிடமிருக்கில்
ராக்ஷசகணங்களுமோடும்
ரவிதனைக்கண்டஇருளதுபோல
லங்கனப்பிணிகளுமிரண்டு
ரஹணபவசவென்றுதானுரைக்க
லவிவிதுவெனவடங்கும்
ரமளியில்செபிக்கவாசரியென்ன
ரஞ்சதிவங்நங்கெனவே
ரஹணபவசசிவாயநமாவென
ராக்ஷதபூதங்களோடும்
ரவிதனைக்கண்டபனியதுபோல
லங்கணவறுமைகள்நீங்கி
ரஹணபவசகுறுமுனிதனக்கு
அக்ஷரமுரைத்திடுங்குகனே
ரஞ்சிதமானகந்தனேகைலை
ரஹணபவசநாயகனே. (உ)

உ

கந்தன் துணை.




மூலமந்திரம்.

ஹ்ரீம்-ஐயும்-கிலியும்-ஔவும்சௌவும்ஓம்

ரஹணபவச.


இந்தச்சக்கரத்தை வெண்ணாவற் பலகையில் வரைந்து, எழுத்துகளை யடைத்து, பட்டுஆசனத்தில் ஈசான திசை முகமாகவிருந்து பூசித்து, ஸ்படிகத்தாழ்வடத்தால் குருவாரந்தொடங்கி - ௧00௮- உருவேற்றச் சித்தியாகும்.

# மோகனம்.

ஹணபவசரவென அக்கினிமுதலாய்
அக்கினியங்கென ஓத
ஐயுடன் றீயும்கிலிரஹரசவ்வும்
ஐம்பத்தோரக்ஷரமுதலாய்
ஹணபவசரவென் றடிக்கடி துதிக்க
அகுதியைக்காத்திடுமரனே
அரிநமசிவயவென் மேல்வருமைங்கௌ
அங்வங்உங்கெனஉரைக்க
ஹணபவசர ஆஈஊஏஓ
அடங்கிய அக்ஷரஞ்செபிக்க
அண்டமிப்பிண்டசராசரமுதலாய்
அக்கினிசொரூபமாய்நின்றீர்
ஹணபவசரஹண சத்திஓங்காரி
யம்மனுமருளியபாலா
ஐயனேமெய்யா அருளினாலெனைக்கார்
அணிகொள் வேல்ஹணபவசரனே.

உ

செவ்வேள் துணை.




மூலமந்திரம்.

ஐயும்-கிலியும்-ஔவும்சௌவும்ஓம்-றீம்

ஹணபவசர.

இந்தச்சக்கரத்தை அலரிப்பலகையில் வரைந்து, எழுத்துகளையடைத்து, புலி ஆசனத்தில் வடக்குமுகமாக விருந்து பூசித்து, மிளகுதாழ்வடத்தால் சோமவாரந்தொடங்கி - ௧00௮ - உருவேற்றச் சித்தியாகும்,

# தம்பனம்.

---

ணபவசரஹவென் றேபுவிதுதிக்க
நமன்பயந்தோடிடுமெதனில்
நங்கெனபோகயோகமேகாட்டும்
நமசிவாயவெனவுரைக்க
ணபவசரஹவென் றரியெழுத்தோத
நங்கிறீயிரியுமேமுதலாய்
ணங்குடன் மங்குஞ்சிங்குவங்கெனவே
நலமிகசெபித்திட அங்காய்
ணபவசரஹவெனக்குஷ்டஞ்சோகை
நாட்டிய உயிர்ப்புகள்மிகவும்
நடுக்கமாம்மேகஞ்சூலைகாமாலை
நயனரோகம்தலைவலியும்
ணபவசரஹவென் றிளைப்பொடுமூலம்
நாசமாஞ்சுரங்களும்பிணியும்
நண்ணிநான்மெலிந்துதிரிந்துழலாமல்
ரக்ஷியும்ணபவசரஹனே. (௪)

---

உ

பாவகி துணை.




மூலமந்திரம்.

கிலியும்-ஔவும்-செளவும்ஓம்றீம்-ஐயும்

ணபவசரஹ.


இந்தச்சக்கரத்தைஆலம்பலகையில்வரைந்து, எழுத்துகளையடைத்து, தற்பாசனத்தில் நிருதிதிசைமுகமாக விருந்து பூசித்து, தாமரைமணித்தாழ்வடத்தால் அங்காரக வாரந்தொடங்கி-க00அ-உரு வேற்றச் சித்தியாகும்.

## உச்சாடனம்.

பவசரஹணவென்றுரைத்திடுமடியார்
பவங்களையகற்றிடுமுருகா
பராபரிஐயுங்கிலியரிசவ்வும்
பாங்குறிறீங்கெனுமகாரம்
பவசரஹணவென்றுரைக்கவேமுத்தி
பலித்திடும்ஞானமும்புகழும்
பரையுடன்வாலைபுவனையும்வாசி
பார்க்கவேயோகமுமாகும்
பவசரஹணவென்றோதிடமயின்மேல்
பாங்குடன்ஏறிநீவருவாய்
பலபிணிபில்லிகதறிடவேலால்
பற்றிடக்குத்திடுமுருகா
பவசரஹணவெனடங்குடிங்கெனவே
பறக்குமேபூதங்களைத்தும்
பாதமேகாட்டிகதியெனக்கருள்வாய்
பவசரஹணவெனுங்குகனே. (௫)

உ

முருகன் துணை.




## மூலமந்திரம்.

ஔவும்-சௌவும்ஓம்- றீம்-ஐயும்கிலியும்
பவசரஹண.

இந்தச்சக்கரத்தைப் பலாப்பலகையில்வரைந்து, எழுத்துகளையடைத்து,சித்திராசனத்தில் வாயுதிசைமுகமாகவிருந்து பூசித்து, சிந்தில்மாலைத்தாழ்வடத்தால் புதவாரந்தொடங்கி-௧௦௦௮ - உருவேற்றச் சித்தியாகும்.

## மாரணம்.

---

வசரஹ்ணபவென்றுரைத்திடவறியேன்
வள்ளிதெய்வானையுமறியேன்
வரந்தருந்தன் கைகனியதற்காக
வலமதாய்வந்ததுமறியேன்
வசரஹணபவென்றுரைத்தமுன்னோர்க
வகுத்திடுங்கவிகளுமறியேன் [ள்
வாயினால்துதித்துதாவிநான்புகழேன்
வரந்தருஞ்சரஹணபவனே
வசரஹணபவென்றிடாநிதம்வறுமை
வல்வினைவஞ்சனையனைத்தும்
வந்திடாதகற்றநின்னடிதொழுதேன்
வணங்கியேதஞ்சமென்றடுத்தேன்
வசரஹணபவென்றிடினௌவுங்கிலியும்
வகுத்திடுமையுமேல்ரீயும்
வடிவதுசவ்வும்வகுத்ததுநவ்வும்
வந்திடுஞ்சரஹணபவனே. (கூ)


முற்றிற்று.

முருகன் துணை.

---

உ

வேலவன் துணை.




## மூலமந்திரம்.

சௌவும் ஓம்-றீம்- ஐயும்கிலியும்-ஔவும்

வசரஹணப.

இந்தச் சக்கரத்தை அத்திப்பலகையில்வரைந்து, எழுத்துகளையடைத்து, வேங்கைஆசனத்தில் அக்கினிதிசைமுகமாகவிருந்து பூசித்து,நாபிமணித்தாழ்வடத்தால் சனிவாரந்தொடங்கி-க00அ-உருவேற்றச் சித்தியாகும்.

உ

வள்ளிமணாளன் துணை.

# சமுதாயமாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

இந்தச்சக்கரத்தை வெள்ளி அல்லது தங்கரேக்கில் வரைந்து, எழுத்துகளை யடைத்து, பதுமாசனத்திலிருந்து கிழக்கு முகமாகவிருந்து பூசித்து, உருத்திராட்சத் தாழ்வடத்தால் க00அ-உரு தினம்ஏற்ற சர்வகாரியமுஞ் சித்தியாகும்.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| ஞானவாசிட்ட வசனம் | 1 | 8 | 0 |
| வள்ளலார் சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர் 16-சாஸ்திரம் | 0 | 10 | 0 |
| பகவற்கீதை வசனம் (தஞ்சை பதிப்பு) | 1 | 4 | 0 |
| பிரபுலிங்கலீலை | 0 | 8 | 0 |
| நாநாசீவவாதக்கட்டளைக் கொத்து | 0 | 6 | 0 |
| திருக்கடந்தைபுராணம் உரை | 0 | 8 | 0 |
| அரிச்சந்திரபுராண மூலம் | 0 | 8 | 0 |
| சேதுபுராணம் வசனம் | 2 | 0 | 0 |
| சானந்தகணேசர் புராணம் | 0 | 12 | 0 |
| திருவள்ளுவர் குறள் மூலம் | 0 | 4 | 0 |
| சிவநாமசங்கீர்த்தனம் (படம்) | 0 | 4 | 0 |
| சப்தரிஷிவாக்கியம் 5500-பாடல் (திக்கு) | 6 | 0 | 0 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |
| மனவுல்லாச கதை | 0 | 8 | 0 |

கொ-லோகநாத முதலியார்,
மனோன்மணிவிலாச சென்ட்ரல்
புக்டிபோ, 29 நெ. வைத்தியநாத முதலியார் வீதி, சென்னை.